**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

CC.No.172/2017

Date. 24.07.2025

பெயர்: செல்வராஜ் த/பெ.குமாரசாமி

வழக்கு சாட்சி. அ.சா.1

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

1. என் மீதும் முன்னாள் அமைச்சர் NKKP.ராஜா மற்றும் இந்த வழக்கின் சாட்சியான கிஷோர் குமார் மீதும், ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நில அபகரிப்பு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சாட்சி ரவி எனது மைத்துனர் என்றால் சரிதான். சாட்சி கிஷோர் குமார் எனது நண்பர் என்றால் நண்பர் அல்ல பழக்கமானவர். கிஷோர் குமார் எனக்கு சொந்தமான இடத்தில் பைனான்ஸ் நிறுவனம் வைத்து தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் அது தவறு. கிஷோர் குமார் நிதி நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார் என்றால் அப்போது நடத்தி வந்தார்.

2. எதிரிக்கு சொந்தமான இடத்தை நாங்கள் அவரை அடித்து மிரட்டி அபகரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரியின் ஜாதியை பற்றி கூறி அவரை நாங்கள் பலமுறை அவமானப் படுத்தி உள்ளோம் என்றால் இல்லை. கடந்த 2001 ஆம் வருடம் எதிரி என்னிடம் ரூபாய் 35 ஆயிரம் கடன் கேட்டார் என்றும், நான் அவரிடம் இருந்து எட்டு வெற்று காசோலைகள் மற்றும் முத்திரைத்தாள் மற்றும் ப்ரோநோட் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு ரூபாய் 24,600 தொகை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. அதன் பிறகு 2002 ஆம் வருடம் மேற்படி முழுத்தொகையையும் எதிரியிடம் கொடுத்துவிட்டார் என்றும், ஆனாலும் நான் மேற்படி செக்யூரிட்டிக்காக கொடுத்த ஆவணங்களை

திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. நான் அரசியல் பலம், பணபலம் கொண்ட நபர் என்றால் சரியல்ல இரண்டு முதல் ஏழு வரையிலான சாட்சிகள் அனைவரும் என்னுடைய அடியாட்கள் என்றால் இல்லை. எதிரி வீட்டின் அசல் ஆவணத்தை கனரா வங்கியில் இருந்து பெறுவதற்காக எதிரியை மிரட்டுவதற்காக அவருடைய வேலையை காலி செய்வதற்காகவும், இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:03:39 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**CC.No.172/2017**

Date. 24.07.2025

பெயர்: ஸ்ரீராமச்சந்திரன் த/பெ.குப்புசாமி

வழக்கு சாட்சி. அ.சா.2

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. அ.சா.1 செல்வராஜை எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் கடந்த 2001 க்கு முன்பு சுமார் மூன்று வருடமாக பழக்கம். செல்வராஜ், ரவி, கிஷோருக்கும், எதிரி நேரு விவேகானந்தனுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியுமா என்றால், வீடு சம்பந்தமாக ஒரு பிரச்சனை இருப்பதாக பேசிக் கொண்டார்கள். அதுதான் தெரியும் வேறு எதுவும் இந்த வழக்கைப்பற்றி தெரியாது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:03:46 +0530

Judicial Magistrate No.III,
Erode.

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

CC.No.172/2017

Date. 24.07.2025

பெயர்: சித்தேஷ்வரன் த/பெ ஜெயப்பிரகாசம்

வழக்கு சாட்சி. அ.சா.3

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

1. செல்வராஜ், ரவி, கிஷோருக்கும், எதிரி நேரு விவேகானந்தனுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு முழுவதுமாக தெரியுமா என்றால் தெரியும் பவர் பத்திரம் எழுதி இருந்தார்கள். எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்றால் 23.05.2003 ஆம் தேதி என்று நினைக்கிறேன் செல்வராஜ், கிஷோர், ரவி ஆகியோர்களை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் சுமார் 2008 ஆம் வருடத்தில் இருந்து தெரியும்.

2. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. செல்வராஜ் மற்றும் கிஷோர் என்பவர்களின் அடியாள் நான் என்றால் சரியல்ல. எதிரியின் ஜாதியைப் பற்றி நாங்கள் அவரை திட்டியதால் தான் அவர் புகார் கொடுத்தார் என்றும், அது உண்மையான புகார் தான் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் சுமார் 2009 ஆம் வருடத்திலிருந்து தெரியும்.

3. நான் சாட்சியாக கையொப்பம் செய்ததாக சொல்வது பொய் என்றும், செல்வராஜ், கிஷோர் மற்றும் ரவி கேட்டுக் கொண்டதற்காக சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், சாட்சி கையொப்பம் செய்யும்படி எதிரி என்னிடம் கேட்டுக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியில்லை. எதிரியிடம் நான் சென்று தகராறு செய்யும் வரை எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றும், எனக்கும் அவரை யார் என்று தெரியாது என்றும் சொன்னால் நான் தகராறு செய்யவில்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:04:08 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

CC.No.172/2017

Date. 24.07.2025

பெயர்: குமார் த/பெ மாரப்பன்

வழக்கு சாட்சி. அ.சா.4

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

19.05.2008 ஆம் தேதி கிஷோர் குமாரிடம் ரூபாய் 40 ஆயிரம் மறுபயன் பெற்று ரசீது பெற்று கிரயம் செய்துவிட்டு, பணத்தை எதிரியிடம் கொடுத்து விட்டேன் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரித்த போது சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி எனக்கு எந்த வருடத்தில் இருந்து பழக்கம் என்றால் எதிரி எனக்கு பழக்கம் இல்லை சாட்சி இராமச்சந்திரன் 2002 லிருந்து என்ன தொழில் செய்து வந்தார் என்றால் மஞ்சள் வியாபாரம் மற்றும் நிதி நிறுவனம் வைத்து தொழில் செய்து வந்தார். எனது பெயரில் பொது அதிகார பத்திரம் எழுதி வைக்கப்பட்டதா என்றால் இல்லை. கிஷோர் குமார், ரவி மற்றும் எதிரி ஆகியோருக்கு இடையே உள்ள இடம் சம்பந்தமான பிரச்சினை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. செல்வராஜ், கிஷோர் குமார், ரவி ஆகியோர்களின் அடியாள் நான் என்றால் இல்லை. இவ்வழக்கின் சாட்சிகள் ராமச்சந்திரனை தவிர மற்ற அனைவரும் எனக்கு பழக்கம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:04:18 +0530

Judicial Magistrate No.III,
Erode.

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**CC.No.172/2017**

Date. 24.07.2025

பெயர்: ரவி த/பெ. கந்தசாமி

வழக்கு சாட்சி. அ.சா.5

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

1. சாட்சி செல்வராஜ் எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனக்கு உறவினர் அல்ல ஒரே காம்ப்ளக்ஸில் இருக்கிறார். நான் கடந்த 2002 ஆம் வருட காலத்தில் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால், பைனான்ஸ் தொழில் செய்து வந்தேன். எனது அக்காவை தான் சாட்சி செல்வராஜ் திருமணம் செய்துள்ளார் என்றால் இல்லை. இவ்வழக்கின் சாட்சிகளை கடந்த 2002 ஆம் வருடத்திற்கு முன்பு தெரியுமா என்றால் சாட்சி கிஷோர் குமாரை மட்டும் தெரியும். எதிரியை எனக்கு எந்த வருடத்தில் இருந்து தெரியும் என்றால் கடந்த 2002 ஆம் வருடம் வங்கிக்கு சென்ற போது தெரியும்.

2. 2003 ஆம் வருடம் எதிரி எனக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தாரா என்றால் ஆமாம். நான் அதன் அடிப்படையில் கிஷோருக்கு கிரயம் செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம். கிஷோரிடம் ரூபாய் நாற்பதாயிரம் பணம் பெற்று எதிரியிடம் கொடுத்து ரசீது வாங்கினேன் என்றால் வாங்கினேன். வாங்கி கிஷோரிடம் கொடுத்து விட்டேன். எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை. கடந்த 2003 க்கு முன்பு எனக்கும், எதிரிக்கும் பண வரவு செலவு இல்லை என்றால் சரிதான்.

3. கடந்த 2003 இல் எதிரி எங்கு குடியிருந்தார் என்றால் ஃபயர் சர்வீஸ் பின்புறம் இருந்தார். வீதியின் பெயர் ஞாபகம் இல்லை. 2003 இல் எதிரி எங்கு வேலை செய்து வந்தார் என்றால், வ.உ.சி.பார்க் கிளை கனரா வங்கியில் வேலை செய்து வந்தார். அப்போது அவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால், கிளர்க்காக வேலை செய்து வந்ததாக சொன்னார். நான் தற்போது வரை எனது பெயரில் எவ்வளவு கிரைய பத்திரம் மற்றும் பவர் பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் இந்த பவர் பத்திரத்தை தவிர வேறு எந்த கிரைய ஆவணமும், பவர் பத்திரமும் எனது பெயரில் இல்லை. எதிரி உட்பட பல நபர்களின் சொத்துக்களை நான் அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் மற்றும் மற்ற சாட்சிகள் அனைவரும் எதிரியை ஜாதியை சொல்லி திட்டியும், அவருக்கு கொலை மிரட்டல் விடும் வரை அவரை எனக்குத் தெரியாது என்றும், அவருக்கும் எங்களை தெரியாது என்றும் சொன்னால், நான் அவ்வாறு திட்டவில்லை மிரட்டவில்லை. அசல் ஆவணம் இல்லாமல் தான் கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. நாங்கள் பலமுறை எதிரியை மிரட்டி தகராறு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், கிஷோர் குமாரிடம் கிரயம் செய்து கொடுக்க என்னிடம் சொல்ல வில்லை என்றும், கிஷோர் குமாரிடம் ரூபாய் 40 ஆயிரம் பணம் பெற்று அதை எதிரியிடம் கொடுத்து ரசீது வாங்கி கிஷோர் குமாரிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தேதி மாதம் ஞாபகம் இல்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:04:34 +0530

Judicial Magistrate No.III,
Erode.

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**CC.No.172/2017**

Date. 24.07.2025

பெயர்: கிஷோர்குமார் த/பெ. நல்லசாமி

வழக்கு சாட்சி. அ.சா.6

(எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

1. நான் கடந்த 2002 காலகட்டத்தில் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால், பைனான்ஸ் தொழில் செய்து வந்தேன். சாட்சி செல்வராஜ் எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால், சுமார் 30 வருடமாக பழக்கம். சாட்சி செல்வராஜின் மைத்துனர் ரவியை எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால், சுமார் 25 வருடமாக பழக்கம். சாட்சி செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான இடத்தில் தான் நான் பைனான்ஸ் செய்து வந்தேன் என்றால் இல்லை. எதிரியை எனக்கு எப்போது தெரியும் என்றால் கடந்த 2003 ஆம் வருடம் இடம் வாங்கும்போது தான் தெரியும்.

2. மேற்படி இடத்தின் அசல் ஆவணம் இல்லாமல் தான் கிரயம் செய்தோம் என்றால் சரிதான். அசல் ஆவணத்தை வங்கியிலிருந்து வாங்குவதற்காக தான் முன்பணம் கொடுத்தேன். அசல் ஆவணம் பெற்று தராததால் முன் பணத்தை திரும்ப கேட்டேனா என்றால், கிரையத்திற்கு பின்னிட்டு வாங்கி தருவதாக சொன்னார். அசல் ஆவணத்தை பெறுவதற்கு சிவில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். எந்த வருடத்தில் கிரைம் செய்யப்பட்டது என்றால் 2008 ஆம் வருடம். எந்த வருடம் கிரய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 2003 ஆம் வருடம்.

3. மேற்படி கிரைய ஒப்பந்தமானது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் மற்ற சாட்சிகளுடன் சேர்ந்து கூட்டுச்சதி செய்து எதிரிடமிருந்து வீட்டை அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல நான் சொல்வது போல் எதிரியிடம் கிரைய ஒப்பந்தம் செய்யவில்லை என்றும், அதற்காக எதிரிக்கு ரூபாய் 4 லட்சம் முன்பணம் கொடுக்கவில்லை என்றும் அதேபோன்று ரூபாய் நாற்பதாயிரம் எதிரிக்கு கொடுத்துவிட்டு கிரயம் செய்ததாக கூறுவது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.07.24 17:04:45 +0530

Judicial Magistrate No.III,

Erode.